Registered as a Newspaper in Ceylon ★ விலை சதம் 10

# ஈழநாடு

ஆண்டு 7 EELA NADU இதழ் 79

National Tamil Daily தேசிய தினசரி

(1-5-65)

விசுவாவசு சித்திரை 19 துல்ஹஜ் பிறை 28 சனிக்கிழமை

தரத்திலும் மணத்திலும் சிறந்தது
காமதேனு கோப்பியே
தயாரிப்பாளர்:
பரீதா ஸ்ரோர்ஸ்
29, பழைய சோனகத் தெரு,
கொழும்பு - 12 போன்: 5830

# அமெரிக்க உதவி மீண்டும் கிடைக்கும்?

## பேச்சு வார்த்தையில் பிரதமரே கலந்து கொள்வார்

கொழும்பு, வெள்ளி

இலங்கைக்கு மீண்டும் அமெரிக்க உதவி கிடைப்பதற்கான பேச்சுவார்த்தைகள் அமெரிக்க அரசாங்கத்துக்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் இடையில் விரைவில் ஆரம்பமாகவிருக்கிறது. இப்பேச்சு வார்த்தைகளில் பிரதமர் திரு. டட்லி சேனநாயக்காவும் ராஜாங்க மந்திரி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனவும் நேரடியாகக் கலந்துகொள்வர் எனத் தெரிகிறது.

இலங்கையிலுள்ள எண்ணெய்க் கம்பனிகளை முன்னைய அரசாங்கம் எடுத்துக்கொண்டபொழுது நஷ்டஈடு கொடுக்க முன்வராததால் அமெரிக்கா இலங்கைக்கு அளித்துவந்த உதவியை நிறுத்திக்கொண்டது.

கால்டெக்ஸ், எஸ்ஸோ, ஷெல் ஆகிய மூன்று எண்ணெய்க் கம்பனிகளினதும் பிரதிநிதிகள் நஷ்டஈடு சம்பந்தமாக அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்த இப்போது இலங்கைக்குவந்துள்ளனர்.

## ஸீட்டோவில் வியட்நாம் பிரச்னை

லண்டன், ஏப். 30

இங்கு கூடியுள்ள 'சீட்டோ' ராணுவ ஆலோசகர்களின் மகாநாடு வியட்நாம் நிலைமை பற்றி பரிசீலனை செய்தது.

சீட்டோவின் 8 அங்கத்துவ நாடுகளில் அமெரிக்கா, அவுஸ்திரேலியா, நியூஸிலாந்து, தாய்லாந்து, பிலிப்பைன்ஸ் ஆகிய ஐந்து நாடுகள் ஏற்கனவே வியட்நாமில் கொரில்லாக்களுக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கின்றன.

## புதிய நம்பிக்கையுடன் மேதினக் கொண்டாட்டம்

### தமிழரசுக்காரியதரிசி செய்தி

சுழிபுரம், வெள்ளி

தமிழ் பேசும் மக்கள் புது நம்பிக்கையோடு இம்முறை மேதினத்தைக் கொண்டாடுகிறார்கள் என்று தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் திரு. அ. அமிர்தலிங்கம் மேதினத்தையொட்டி விடுத்துள்ள செய்தியில் குறிப்பிட்டுள்ளார். அச்செய்தியில் அவர் கூறுவதாவது:-

மே தினம் ஒருசில கட்சிகளுடைய தனியுடமையாக இருந்த காலம்மாறி எல்லோரும் கொண்டாடும் ஒரு நாளாக வந்திருப்பது வரவேற்கத் தக்கதே. உலகமே சமதர்மத்தை நோக்கி முன்னேறிச்செல்லும் சகாப்தத்தில் இது தவிர்க்க முடியாது. முதலாளித்துவ நாடுகள் என்று அழைக்கப்படும் நாடுகள் தானும் 19-ம் நூற்றாண்டின் முற்பகுதியிலோ 20-ம் நூற்றாண்டின் முற்பகுதியிலோ கைக்கொண்ட கட்டுப்பாடற்ற தனியுடமைக் கொள்கைகளைக் கைவிட்டு உழைப்பவனுடைய உரிமைகளைச் சட்டபூர்வமாகப் பாதுகாக்கும் காலம் இது. இவை எல்லாம் தொழிலாளர் மத்தியில் ஏற்பட்ட விழிப்புணர்ச்சியின் பலனே. இந்த விழிப்புணர்வை, உலகம் முழுவதுமுள்ள உழைப்பாளரின் ஒற்றுமையை, பிரதிபலிக்கும் தினமே மேதினம்.

தொழிலாளர் மாத்திரமல்ல உரிமை மறுக்கப்படும் சமுதாயங்களெல்லாம் எந்த உருவத்தில் வந்தாலும் ஏகாதிபத்தியமுறையை எதிர்த்துக் குரல் கொடுக்கும் நாளாகவும் மே நாள் விளங்குகிறது. இந்நாட்டில் உடல் உழைப்பையோ, மூளை உழைப்பையோ நம்பிவாழும் உழைப்பாளிகளை மிக அதிகப்படியாகக் கொண்ட சமுதாயம் தமிழ் பேசும் சமுதாயமே. தமது இழந்த உரிமைகளை இன்னும்

(6-ம் பக்கம் பார்க்க)

## "தனித்தன்மையைக் காப்பதுடன் நாட்டையும் காப்போம்"

### யாழ். மேயரின் மேதினச் செய்தி

யாழ்ப்பாணம், சனி

மே தினத்தையொட்டி யாழ்ப்பாண நகர மேயர் திரு. சு. செ. மகாதேவா விடுத்துள்ள செய்தியில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்:

"உழைப்பவனுக்கே உலகம் உரியதென்ற உண்மையை உலகுக்கு எடுத்தோதிய உயரிய நன்நாள், மேதினம். மேதினம் குறிப்பிட்டதோர் நாட்டுக்கோ குறிப்பிட்டதோர் இனத்துக்கோ அல்லது குறிப்பிட்டதோர் அரசியல் கட்சிக்கோ சொந்தமானதொன்றல்ல. அது உலகத் தொழிலாளர் அத்தனைபேருக்கும் சொந்தமான பெருநாளாகும். உலகை வாழவைப்போன் தொழிலாளி, ஆகையால் தொழிலாளியின் மேதினப் பெருநாள் தொழிலாளிக்கு மட்டுமல்லாது அகில உலகத்தவரும் கொண்டாட வேண்டிய உன்னத பெருநாளாகின்றது.

எனவேதான் ஒப்பரிய அப்பெருநாளை உழைப்பாளியின் உரிமைத் தினத்தை இவ்வாண்டு தமிழ்பேசும் தொழிலாளரும், தொழிலாளரோடுசேர்ந்து தமிழ்பேசும் மக்களும் முற்றிலும் புதியதோர் சூழ்நிலையில் தம் வாழ்வின் திருநாளாகப் பெருமையோடும் மகிழ்வோடும் பூரிப்போடும் கொண்டாடுகிறார்கள்.

இடதுசாரிக் கட்சிகளினது இனபேதங்கடந்த தொழிலாளர் ஒற்றுமை பொய்யாய், பழங்கதையாய், கனவாய்ப் பொய்த்துவிட்டபின் நீதும் நன்றும் பிறர்தர வாரா என்ற பழைய கொள்கைக்குப் புதிய மெருகு கொடுத்துத் தமிழ் பேசும் தொழிலாளர் மொழிவழி பிரிந்து இனவழி ஒன்றுபடவேண்டுமென்ற இலட்சியக் கோட்பாட்டின்படி தீர்க்க திருஷ்டியுடன் தனிவழி சென்றதால் இன்று நாம் தேசிய அரசாங்கத்தில் சேர்ந்து ஐக்கிய இலங்கையர் சமுதாயத்தை சமைக்கும் பணியை ஆரம்பித்து வைக்கக்கூடியதாக இருந்தது.

ஒன்றுபட்ட தமிழ்பேசும் தொழிலாளரது கூட்டுச் சக்தியிலேதான் ஏகோபித்த குரலிலேதான் தியாக மனப்பான்மையிலேதான் தமிழ்பேசும் தொழிலாளரது துன்பங்களுக்கும் துயரங்களுக்கும் நிரந்தர விடுதலை இருக்கிறதென்று

(6-ம் பக்கம் பார்க்க)

## வெளிவந்த வினாக்களுக்கு ஒரு பரீட்சையா?

"வினாத்தாள்கள் ஏற்கனவே வெளியாகிவிட்டன. ஏற்கனவேதெரிந்த கேள்விகளுக்கு விடையெழுதுவது பரீட்சை முறைக்கு முரணானது. நாங்கள் இவைகளுக்கு விடை எழுதவிரும்பவில்லை" என்று நேற்று நடைபெற்ற யாழ்ப்பாணம் கனிஷ்ட தொழில்நுட்ப பாடசாலையின் 1965—66ம் ஆண்டுவணிகப்போதனைபுகுமுகப் பரீட்சைக்குத் தோற்றியமாணவர்சிலர் தங்களது விடைத்தாள்களில் எழுதிக்கொடுத்துவிட்டு பரீட்சை நிலையத்திலிருந்து வெளியேறினர். இந்த மாணவர்கள் சிலர் 'ஈழநாடு' காரியாலயத்துக்கு நேரில் வந்தும் இதுபற்றித் தெரிவித்தனர். "இவ்வளவு நாளும் கஷ்டப்பட்டுப் படித்தும் பயனில்லாமல் போய்விட்டது" என்று ஒரு மாணவர் கவலையோடு கூறினார்.

"இன்று நடைபெறவிருக்கும் பரீட்சையில் கொடுக்கப்படவிருக்கும் வினாத்தாள்கள் ஏற்கனவே வெளியாகிவிட்டன. இன்று பரீட்சை எடுக்கும் மாணவர்களின் வினாத்தாள்களுடன் ஒப்பிட்டுப்பாருங்கள், இதனுடன் ஏற்கனவே வெளியான கேள்வித்தாள்களை அனுப்பியுள்ளேன்" என்று ஒரு மாணவர் 29-ம் திகதி பதிவு செய்து ஒரு கடிதம் எமக்கு அனுப்பியிருந்தார். அக்கடிதம் நேற்று காலை கிடைத்தது.

இதுபோன்று வித்தியாதிபதி, மற்றும் கல்வி இலாகா அதிகாரிகளுக்கும் முன்னரே வெளியான வினாக்களின் பிரதிகள் பதிவுத் தபால்மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக ஒரு மாணவர் தெரிவித்தார்.

இப்பரீட்சையை மீண்டும் ஒழுங்கான முறையில் நடத்தவேண்டுமெனக் கோரி நேற்றுப் பரீட்சை எழுத வந்த மாணவ மாணவியர் யாழ்ப்பாணம் கனிஷ்ட தொழில்நுட்பக் கல்லூரி அதிபருக்கு ஒரு மகஜர் அனுப்பியுள்ளனர். இப்பரீட்சைக்கான வினாத்தாள்கள் ஏற்கனவே வெளியாகிவிட்டதென்றும் இச்சீர்கேடு பற்றி விசாரணை செய்ய வேண்டுமென்றும மாணவர்களும் அகில இலங்கை வர்த்தகக் கல்லூரி மன்றமும் கல்வி அமைச்சருக்குப் புகார் செய்துள்ளது.

வினாத்தாள்கள் வெளியானதுபற்றிய புகார்கள் பற்றி யாழ்ப்பாணம்கனிஷ்ட தொழில்நுட்பக் கல்லூரி அதிகாரிகளிடம் விசாரித்தபோது "எங்களுக்கு இது சம்பந்தமாக எதுவும் தெரியாது" என்று கூறினர். கல்லூரி அதிபர் வெளியூர் சென்றிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

## தேசிய சுவீப் முடிவுகள்

கொழும்பு, வெள்ளி

நேற்று இழுக்கப்பட்ட தேசிய சுவீப் முடிவுகள் வருமாறு:-

1-வது பரிசு
06 Q 0924 — ரூ 83,240

2-வது பரிசு
V S 0462 — ரூ 12,896

3-வது பரிசு
03 O 0463 — ரூ 8,224

(6-ம் பக்கம் பார்க்க)

## குமாஸ்தா தற்காலிக வேலைநீக்கம்

கொழும்பு, வெள்ளி

கொழும்புப் பகுதி ஆஸ்பத்திரிகள் சம்பந்தப்பட்ட காசோலையில் மோசடி நடைபெற்றதாக சமீபத்தில் கணக்குப் பரிசோதனையிலிருந்து கண்டுபிடிக்கப் பட்டதைத் தொடர்ந்து சுகாதார இலாகாவைச் சேர்ந்த ஒருகுமாஸ்தா தற்காலிகமாக வேலையிலிருந்து நிறுத்திவைக்கப் பட்டுள்ளார்.

உங்கள் கட்டிடங்கள்
உறுதியாக இருப்பதற்கு
திறமான
★ இரும்புச் சாமான்களும்
★ பெயின்டுவகைகளும்
★ அஸ்பஸ் சீட்டுகளும்
★ மர வகைகளும்
எம்மிடம்
பெற்றுக்கொள்ளலாம்.
விஷ்ணு
ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ்
வல்வெட்டித்துறை

சமசமாஜ கம்யூனிஸ்ட் கூட்டு மேதினம்
இடம்: பழைய பஸ் நிலையம் யாழ்ப்பாணம்.
காலம்: 1-5-65 சனிக்கிழமை மாலை 5-30 மணி
தலைவர் S. நாகராசா M M C
பிரதம பேச்சாளர்கள்:
டொறிக் டி சூசா செனற்றர்
H. G. S. ரத்னவீரா
(M M C)
ஊர்வலம் மாலை 3 மணிக்கு [illegible] கந்தசுவாமி கோவில் வீதியிலிருந்து ஆரம்பமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மணிவாக்கு**

கவனமாக இரு. அகங்காரத்தையும் ஆசையையும் கொல்லு, அவை திரும்பி வரவேகூடாதபடி கொன்றுவிடு. அப்பொழுதுதான் உமக்கு க்ஷேமம்.

—சுவாமி சிவானந்தர்


# ஈழநாடு

EELA NADU National Tamil Daily. Post Box 49, Jaffna. Telegrams: 'EELA NADU' Jaffna Phone: 389.

யாழ்ப்பாணம் விசுவாவசு ஆண்டு சித்திரை மீ 19 உ. (1-5-65)


## ஆனையிறவுத் தடை அவசியமா?

யாழ்ப்பாணத்திலிருந்து வெங்காயம் வெளியூருக்குக் கொண்டு செல்வதற்குள்ள ஆனையிறவுத் தடையை நீக்க வேண்டுமென்று வவனியா மாவட்ட இளைப்புச்சபை கோரியுள்ளது. யாழ்ப்பாணக் குடாநாட்டு விவசாயிகள் பல தடவைகளிலும் இதே கோரிக்கையை விடுத்திருந்தும் இதுவரை பலன் கிடைக்கவில்லை.

சில மாதங்களுக்கு முன் விவசாயிகளின், குறிப்பாக தீவுப்பகுதி விவசாயிகளின் வற்புறுத்தல் காரணமாக ஆனையிறவுத்தடை இருவாரங்களுக்குத் தற்காலிகமாக நீக்கப்பட்டிருந்தது. இந்த இருவார காலத்திலும் இப்பகுதி வெங்காய உற்பத்தியாளர் ஓரளவு நன்மை பெற்றனர். என்றாலும் வெங்காயப் பயிர் அறுவடை செய்திராத விவசாயிகள் நன்மை பெறமுடியாது போய்விட்டது. முக்கிய உணவுப் பொருள்களில் ஒன்றான வெங்காயம் நாட்டின் சுயதேவையைப் பூர்த்தி செய்யக்கூடிய வகையில் இங்கு உற்பத்தி செய்யக்கூடிய வாய்ப்புள்ள போதிலும் ஆனையிறவுத்தடை காரணமாக வெங்காய உற்பத்திக்கு இங்கு ஊக்கமளிக்கப்படாமலிருக்கிறது. இதனால் சில சமயங்களில் வெளிநாடுகளிலிருந்து வெங்காயம் இறக்குமதி செய்ய வேண்டிய நிலையும் ஏற்படுகிறது.

ஆனையிறவுத்தடையை நீக்க வேண்டுமென்று யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ள விவசாயிகள் கோருகிறார்கள்; ஆனையிறவுத்தடையை நீக்கி யாழ்ப்பாண வெங்காயம் இதர இடங்களுக்குக் கிடைக்கக் கூடிய வழிவகைகளைச் செய்யுமாறு ஆனையிறவுக்கு அப்பாலுள்ள வவனியா மாவட்ட மக்களும் இதர பகுதியினரும் கோருகின்றனர். இந்நிலையில் ஆனையிறவுத் தடையை இன்னும் எதற்காக நீடித்துவைத்திருக்கவேண்டும்?

ஆனையிறவுத்தடையை நீக்கினால் தரகர்கள் விவசாயிகளைச் சுரண்டுவதற்கு வாய்ப்புக் கிடைக்குமென்று கூறப்படுவது வழக்கம். இப்பொழுது உத்தரவாத விலைத்திட்டத்தின் கீழ் பல கோக்கச் சங்கங்கள் பலவற்றில் ஊழல் நடைபெறுவதும் விவசாயிகள் ஏமாற்றப்படாமலுமில்லை. வெங்காயத்தை விவசாயிகள் தங்கள் இஷ்டம்போல் வெளியிடங்களுக்குக் கொண்டுசென்று விற்பதற்கு சுதந்திரமிருந்தால் வெங்காய உற்பத்திக்கு ஊக்கமளிக்கப்படுவதுடன் வெளிநாட்டிலிருந்து வெங்காயம் இறக்குமதி செய்யவேண்டிய நிர்ப்பந்தமும் ஏற்படாது. இதேசமயம் யாழ்ப்பாணக் குடாநாட்டு விவசாயிகளுக்கு மட்டும் வெங்காயவிற்பனையில் தடை விதிப்பது பாரபட்சமான நடவடிக்கையுமாகும்.

ஆனையிறவுத் தடையை நீக்கவேண்டுமென்ற கோரிக்கை பற்றி திங்கட்கிழமை யாழ்ப்பாண அரசாங்க அதிபர் தலைமையில் ஒரு மகாநாடு நடைபெறவிருக்கிறது. இம்மகாநாட்டில் செய்யப்படும் முடிவு யாழ்ப்பாண விவசாயிகளுக்கு நன்மைசெய்யக்கூடியதாகவும் நாட்டில் உணவுப் பொருள் உற்பத்தியை துரிதமாகவிருத்திசெய்ய வேண்டுமென்ற அரசாங்கத்தின் நோக்கத்துக்கு ஏற்றதாகவுமிருக்க வேண்டும், அவ்விதமிருக்குமென்றே நாமும் எதிர்பார்க்கின்றோம்.

# சமத்துவம்காணவே மொழி வழி பிரிந்து நிற்கின்றனர்

— ஆ. தேவராசன் —

சுதந்திரம் அடைந்ததற்குப் பின்னர் இலங்கையில் ஏற்பட்ட தொழில் வளர்ச்சி பல சமூகத் திருப்பங்களை ஏற்படுத்தின.

முதலாளியின் அடிமைராக பணம்பெருக்கும் யந்திரமாக இருந்த தொழிலாளி தன் கரங்களின் உரத்தை, சிந்தும் வியர்வையில் உருவாகும் பணமுத்துக்களின் மகிமையை உணரத் துவங்கினன். தானும் மனிதனாக உண்டு, உடுத்து, உழைப்புக்கேற்ற ஊதியம் பெற்று வாழ்வில் உயரவேண்டும் என்ற உற்சாகம்பெற்றான். இந்தத் துடிப்பின் பிரதிபலிப்பாகத் தொழிலாளர் பிரச்சினைகளும், அவற்றுக்கு நீதியும், பரிகாரமும் தேடத் தொழிற்சங்க இயக்கங்களும் வளர்ந்தன.

இந்த உணர்வின் நேரடித் தாக்குதலாகவே 1956-ம் ஆண்டு ஒரு அரசியல் திருப்பம் ஏற்பட்டது. அதைத் தொடர்ந்து தொழிற்சங்க இயக்கமும், தொழில்பிரச்சினைகளும் புதியவேகத்துடன் வளர்ந்தன. சிலசில கட்டங்களில் மகத்தான வெற்றிகளையும் கண்டன. அதே நேரத்தில் அரசியல் சார்பும் தொழிற்சங்க இயக்கத்தில் கலந்ததன் விளைவாக, அரசியல் பகைமை தொழிற்சங்க மட்டத்திலும் மோதத்துவங்கியது. இதனால் சாண்ஏற முழம் சறுக்கியது என்பதுபோல ஏற்பட்ட வளர்ச்சிக்கு மேலாகச் சில சமயங்களில் தோல்வியும் ஏற்பட்டன. தொழிற்சங்கங்கள் காண்பித்த அரசியல் அடிப்படைப் போட்டி மனப்பான்மையும் வெறுப்புணர்ச்சியும் நிலைமையை மோசமாக்கின. ஒரு கட்சியின் தலைமையில் முன்னேறிவந்த தொழிற்சங்க இயக்கவெற்றிகளைக் கண்டு பொறுத்த வேறொரு கட்சி போட்டிக்காக தொழிற்சங்க நடவடிக்கையை பரந்த அடிப்படையில் 1958-ல் மேற்கொண்டு, மேலும் அரசியல் காரணங்களுக்காக திடீரென்று கைவிட்டது இதைத்தொடர்ந்து தொழிலாளர் மத்தியில் பலத்த ஏமாற்ற மனக்கசப்பு ஏற்பட்டது. இதன்பின்னர் ஏற்பட்ட தொழிற்சங்க நடவடிக்கைகள் மொத்தத்தில் அதிக பலனைத் தரவில்லை. அரசியல் சார்பும் அதையொட்டி வளர்ந்த போட்டியும் பொறாமையும் தொழிற்சங்க வளர்ச்சியை — தொழிலாளர் முன்னேற்றத்தை குறைந்த பட்சம் ஓரளவாவது தாழ்த்திவிட்டது.

இந்தநேரத்தில் வளர்ந்து வந்த இனப்பாகுபாடு நாட்டைப் பிளந்துவைத்தது.—மக்கள் மனப்போக்கிலாவது! புதிதாகப் பெற்ற மொழி ஆர்வத்தைச் சரியாகப் பயன்படுத்தத்தெரியாத மக்களும் அதைச் சரியாக வழிப்படுத்தாத அரசியல் தலைவர்களும் இனக்கலவரங்களைக் கூட கிளப்பிவிட்டனர். இந்தப் பாகுபாட்டின் எதிரொலி அரசாங்கசேவையில் இருந்த தமிழ்ஊழியர்களையும் பாதித்தது. அற்சகரும மொழிச்சட்டத்தின் கீழ் பெரும் பாதகச் செயல்கள் முளைத்தன. தமிழ்ஊழியர்கள் ஊதிய உயர்வை இழந்தனர்; இன்னற்பட்டனர். இன, மொழி அடிப்படையில் பாதிக்கப்பட்ட, ஊறுகளுக்கு ஆளாக்கப்பட்ட இந்நாட்டுத் தொழிலாளருள் ஒரு சாராரின் அவலக்குரலைக் கேட்டும் வாளாவிருந்தனர். இந்தநிலைகண்டு பொறுக்காத தமிழ்ஊழியர்கள் பொங்கி எழுந்தனர். பிரிந்தனர். தன்கையே தனக்குதவி என்ற முதுமொழிக்கேற்ப தனியான இயக்கங்களைத் துவக்கினர். தொழிலாளர் ஒற்றுமையை இதுபாதித்த பொழுதிலும், நாகரிகமற்ற ஊமுறையில் அவர்கள் சுரண்டப்பட்ட பொழுது அதைத்தவிர்க்க வேறுவழி இருக்கவில்லை.

1961-ம் ஆண்டு சைவமங்கையர்கழக மண்டபத்தில் தமிழ் அரசாங்க ஊழியர்சங்கம் உருவாக்கப்பட்டது. இதற்குத் திருவாளர்கள் இ. பாலசிங்கம் (கணக்காய்வு அத்தியட்சகர்), தி. இராசதுரை (முன்னாள் வவனியா அரசாங்க அதிபர்) ஆகியோர் கலங்கரைவிளக்கங்கள்போல் வழிகாட்டினர். ஆனால் பல்வேறு தொழில்களைச் செல்துவந்தவர்களின் கூட்டணியாக இருந்த இந்தச்சங்கம் தொழிற்சங்க இயக்கமாக இயங்கச் சட்டத்தடைகள் ஏற்பட்டன. அப்போது திரு. தி. இராசதுரையின் புத்திமதிக்கேற்ப அரசாங்க எழுதுவினைஞர் சங்கம் 1962-ம் ஆண்டு உருவாகியது. இந்தச்சங்கத்தின் முதல் தலைவராக திரு. க. சிவானந்தசுந்தரம் அமர்ந்தார். வேறு வேலைகிடைத்ததும் அரசாங்க சேவையை விட்டு விலகினர். இதன் செயலாளராக இன்று உள்ளூராட்சி அமைச்சர் திரு மு. திருச்செல்வத்தின் கியூ சி அந்தரங்க செயலாளரான திரு இ. பாலசுப்பிரமணியம் பதவி ஏற்றர், தொடர்ந்து மூன்று ஆண்டுகள் இந்தப் பதவியிலிருந்து சங்கத்தைவளர்த்து விட்டார். அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்துக்கு இந்நாட்டுத் தொழிற்சங்கவரலாறில் ஒரு மதிப்பான பெயரை எடுதத்துத் தந்தது இவரது தன்னலங் கருதாத கைம்மாறு கருதாத அயராத உழைப்பேயாகும். இவரது நற்பண்பும், அமைதியும், சலசலப்பற்ற செயற் திறமும் இவருக்கு தமிழ் அரசாங்க ஊழியர் மத்தியில் நன்மதிப்பை ஏற்படுத்தியது — முக்கியமாக அரசாங்க எழுதுவினைஞர்சங்கம் நடத்திய கோடீஸ்வரன் வழக்கின் வெற்றிக்காக இரவு பகல், பசி, தூக்கம் என்று பாராது உழைத்த உழைப்பு சங்கத்தின் வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டும், இந்தத் துறையில் திரு. மு. திருச்செல்வம் கியூ சி., திரு. செ. அரங்கநாதன், திரு வே. செல்வநாயகம் கியூ. சி. ஆகியோரது முயற்சிகளையும் உதவிகளையும் மறப்பதற்கில்லை, இந்த வழக்குடன் புதிய திருப்பம் ஏற்பட்டது, இருந்தும் தமிழ் அரசாங்க ஊழியர்கட்கு வழங்கப்பட்ட கட்டாய ஓய்வு உத்தரவுகளைத் திருப்பிப் பெறத் திரு. இ. பாலசுப்பிரமணியமும், திரு. மு திருச்செல்வம் கியூ. சி. யும் சங்கத்தின் சார்பில் எடுத்த முயற்சிகள் நாடறிந்தஉண்மை, இதேநேரத்தில் தமிழ் அரசாங்க ஊழியர் சங்கமும் கலாநிதி வ. கணேசலிங்கம் தலைமையில் தமிழ் அரசாங்க ஊழியரை உற்சாகப்படுத்தி வந்தது. 1963-ம் ஆண்டுமுதல் துறைமுகத் தொழிலாளர்சங்கம் இலங்கைத் தொழிலாளர் கழகம், நாவாய் இயக்குனர் சங்கம், பொது ஊழியர்சங்கம் முதலான பல்வேறு துறையினர் சங்கங்கள் உருவாகின, அவற்றின் கூட்டணியும் ஒன்று இயக்கம் துவங்கியது. இந்தக் கூட்டணியை அ. எ. ச. தலைவர் திரு. செ. கோடீஸ்வரன் விஸ்தரித்து வளர்க்க முனைகிறார், அரசாங்க எழுதுவினைஞர்சங்கத்தின் வலதுகையாக உழைத்து வருவது அஞ்சல் எழுதுவினைஞர்சங்கம், வாலிப உள்ளம் பெற்ற அதன் அசையாத உறுதிபூண்ட தலைவர் திரு. வே. கனகசபை முதலியின் சேவை என்றென்றும் பாராட்டுக்குரியது. மொழிவழி தொழிற்சங்க இயக்கத்துக்கு வித்திட்டது. மொழிவழித் தொழிற்சங்கங்களின் தந்தை திரு. இராசதுரையே. அவர் காட்டிய மானம்காக்கும் பாதை இது.

இன்று இந்த மொழிவழி தொழிற்சங்கங்களின் மூன்றாவது மேதினம், சமத்துவத்துக்காகப் போரிட்ட தமிழர் கந்தசாமி போன்றோரைப் பலியிட்டனர். இன்று சமத்துவத்தை நிலைநாட்டவே பிரிந்து நிற்கின்றனர், சமத்துவம்தான் இலங்கைத் தொழிலாளரை— ஏன் உலகத் தொழிலாளரையே ஒற்றுமைப்படுத்த முடியும்.

# அரசியல் கலப்பற்ற தொழிற்சங்கம் தேவை

— நா. சண்முகநாதன் —

(செயலாளர், யாழ். மாநகரசபை ஊழியர் சங்கம்)

மேதினம் மேதினியில்வாழும் உழைப்பாளிகளின் திருநாள்.

அடக்கியொடுக்கி நசுக்கப்பட்ட தொழிலாளர் "பொறுத்தது போதும் பொங்கியெழுவோம்" என்று உரிமைபெற பொங்கியெழுந்த தினம். நாளொன்றிற்கு எட்டுமணித்தியால வேலை என்ற கோரிக்கையை முன்வைத்துக் கிளர்ந்தெழுந்த சிகாகோ நாட்டுத் தொழிலாளவர்க்கத்தை அடக்குவதற்காக முதலாளித்துவ அரசு துப்பாக்கிச் சனியன்களைப்பாவித்தது. அதன்பலன் ஆயிரக்கணக்கானோர் தம் உயிர்களை உரிமைப் போராட்டத்தில் வெற்றியீட்டுவதற்காக முதல்படியாகத் தியாகம்செய்தனர். நடுத்தெருவில் தொழிலாளர்களின் பிணக்குவியல். அவர்களின் உடலிலிருந்து ஓடிய செங்குருதி வீதிகளைச் சிவப்பாக்கியது. இதுதான் உலகமெங்கும் உள்ள தொழிலாளத் தோழர்களினால்ஆண்டுதோறும் கொண்டாடப்படும் மேதினத்தின் வரலாறு.

உழைப்பாளிகளின் திருநாளாகிய மேதினத்தை உலகிலுள்ள எல்லா இனத்தவர்களும் எவ்வித வேறுபாடுமின்றி பொதுவாக ஒரே நாளில் கொண்டாடுகின்றனர். உழைப்பாளிகள் என்றரீதியில் எல்லோரும்ஒரே இனம்என்ற எண்ணம் ஏற்படாததே இதற்குக் காரணமாகும்.

இவ்வாண்டு இலங்கையில் கொண்டாடப்படும் மேதினம் தேசிய முக்கியத்துவம் வாய்ந்தது என்று கூறலாம். இரு முக்கிய இனங்களைக் கொண்ட நம்தாய்த் திருநாட்டில் ஏறக்குறைய 12 ஆண்டுகளுக்குப் பின் இப்போதுதான் சிறுபான்மை இனத்தின் ஒத்துழைப்புடன் தேசிய அரசாங்கம் அமைக்கப்பட்டுள்ளது. அவ்வரசாங்கத்தின் ஆட்சியின் கீழ் நாம் குறிப்பாகச் சிறுபான்மையினமாகிய தமிழ்த் தொழிலாள வர்க்கம் இழந்த உரிமைகளை மீண்டும் பெறமுக் கொள்ள முடியும் என்ற நம்பிக்கை ஓரளவு எமக்கு ஏற்பட்டுள்ளது.

அரசியல்வாதிகள் தொழிற்சங்கங்களிடையே பொறுப்பான பதவிகளைக் கைப்பற்றி அவற்றைத் தம் சொந்தநலன்களுக்குப் பகடக்காய்களாகப் பயன்படுத்தி வந்தனர், வருகின்றனர். இவர்களின் அரசியல் தலையீடுகளினால் பலம் வாய்ந்த பல தொழிற்சங்கங்கள் சின்னாபின்னமாகச்சிதறிப் பலவீனப்பட்டுள்ளதை நாம் காணக்கூடியதாகவிருக்கின்றது. அரசியல்வாதிகளின் சந்தர்ப்பவாத யோசனைகளுக்குச் செவிமடுத்த காரணத்தினால் தான் தொழிலாளர்களின் 21 கோரிக்கைகள் எங்கோ ஓர் மூலையில் முடங்கிக் கிடக்கின்றது.

(5-ம் பக்கம் பார்க்க)

# தொழிலாளியும் மனிதன்; அவனுக்கும் உரிமையுண்டு

சோ. சிவரத்தினம் —

1889-ம் ஆண்டு மே திங்கள் 1-ம் நாள் தொழிலாளரினம் உரிமைக் குரலெழுப்பி சிகாகோ வீதியில் நடந்துகொண்டு இருந்தது. வெறிப்பார்வை பார்த்த முதலாளிகள் அவர்தம் அடிவருடிக் கிடந்த அரசாங்க பதுமைகளுக்கு ஆணை பிறப்பித்தனர். சேனைவந்தது சில நிமிடத்திற்கெல்லாம் தொழிலாளர்களின் செங்குருதி சிகாகோ பெருவீதிகளில் வெள்ளமாகப் பெருக்கெடுத்தது......

உச்சிவேளை, வெய்யில் கொளுத்திக் கொண்டிருந்தது. ஆயிரக்கணக்கான மக்கள் கூட்டம் தூக்குமேடைகளை கண்ணீர் வடியும் விழிகளோடு பார்த்துக்கொண்டிருந்தது,

சிறுவர்களும் தாய்மார்களும் வயோதிபர்களுமாக கூடி நின்றனர், வைத்த விழி எடுக்காமல் அத்தனைபேரும் தூக்குமேடைகளை பார்த்துக்கொண் டிருந்தனர். அவர்கள் விழியில் பீதி படர்ந்திருந்தது என்று சொல்ல முடியாது. பூமிக்கடியில் குமுறிக்கொண்டிருக்கும் எரிமலையைப்போலத்தான் அவர்கள் உள்ளமும். ஆவேச உணர்ச்சிகளை அடக்கிக்கொண்டு அமைதியாக இருந்தது.

1887-ம் ஆண்டு நவம்பர் மாதம் 11-ம் நாள் அமெரிக்காவில் நடந்த நிகழ்ச்சி.

பொறுமையென பொறுத்துக்கொண்டிருந்த தொழிலாளர் இனம் கொஞ்சம் கொஞ்சமாக சகிப்புத் தன்மையைக் கைநழுவவிட்டது தொழிலாளியும் மனிதன்தான் அவனுக்கும் முதலாளியைப் போல் உடலும் உணர்வும் உண்டு என்று குரல் எழுந்தது.

முதல் குரல் அமெரிக்காவில் எழுந்தது. 1878-ல் கேட்ட அந்த குரல் நத்தைகளாக மதிக்கப்பட்ட தொழிலாளர்களின் புரட்சிக் குரலாக உருவெடுத்தது. எங்களுக்கு உரிய ஊதியம் கொடுக்கப்படவேண்டும். எட்டுமணி நேர வேலை என்ற முழக்கங்கள் ஓங்கி

(6-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பாகிஸ்தான் துருப்புக்கள் மீது பலமான பீரங்கிப் பிரயோகம்

## அமெரிக்க ஆயுத உபயோகம் பற்றி மீண்டும் எச்சரிக்கை

புதுடில்லி, ஏப்ரல் 30

பியர்பேட்டிலிருந்து தென் மேற்கே நகர்ந்து செல்லும் பாகிஸ்தான் படையினர்மீது இந்தியத் துருப்புகள் பலமான பீரங்கித் தாக்குதல் நடத்திவருகின்றன.

தற்போது விலகிச் செல்லும் பாகிஸ்தான் படைகள் வேறு இடங்களில் தாக்குதல் நடத்த தங்கள் பலத்தைக் குவித்து வருவதாகத் தெரிகிறது.

கட்ச்பகுதியில் இந்தியா மேற்கொண்ட யுக்தியினால் நற்பலன் கிடைத்திருப்பதாயும் ஊடுருவாளர்கள் தடுத்து நிறுத்தப்பட்டிருக்கிறார்கள் என்றும் டில்லியில் அதிகாரி ஒருவர் கூறினர்.

இந்தியா அமெரிக்க ஆயுதங்களை உபயோகித்ததாய் பாகிஸ்தான் கூறியிருப்பது முற்றுக் பொய் என்றும், பாகிஸ்தான் துருப்புகள் முன்னேறியிருப்பதாகக் கூறுவதும் பொய் என்றும் அந்த அதிகாரி கூறினர்.

"அமெரிக்க ஆயுதங்களை உபயோகித்து அமெரிக்காவுக்கு தர்மசங்கடமான நிலைமையை உண்டுபண்ண இந்தியா விரும்பவில்லை" என்றும் அவர் கூறினர்.

பாகிஸ்தான் கட்ச்பகுதியிற் அமெரிக்க ஆயுதங்களை உபயோகித்திருப்பது சம்பந்தமாக அமெரிக்கா எடுத்திருக்கும் நடவடிக்கை வாஷிங்டனிலுள்ள இந்தியத்தூதர் திரு. பி. கே. நேருவுக்குத் தெரிவிக்கப்பட்டது. மீண்டும் இவ்விஷயமாக பாகிஸ்தானுடன் தொடர்பு கொள்வதாயும் அமெரிக்க அதிகாரிகள் திரு நேருவிடம் கூறினர்களாம்.

## பழைய ஆயுதம் வேண்டாம

நைரோபி, ஏப்ரல் 30

கென்யாவுக்கு அன்பளிப்பு செய்த ஆயுதங்கள் திருப்பியனுப்பப்பட்டிருப்பதாய் பிரதம மந்திரி திரு. கென்யாட்டா கூறினர். இவை உபயோகமற்ற பழைய ஆயுதங்களென்றும் கென்யா ராணுவத்தை நவீனப்படுத்த இவை உதவாதென்றும் அவர் கூறினர்.

## டொமினிக்கன் குடியரசு

வாஷிங்டன், ஏப்ரல் 30

டொமினிக்கன் குடியரசில் அமெரிக்க மாலுமித் துருப்புகளுடன் கைகலப்பு ஏற்பட்டதாயும் நேற்று அங்கு 40 பேர் கொல்லப்பட்டு 1200 பேர் காயமடைந்ததாயும் அறிவிக்கப்பட்டது.

# ஜெனிவா ஒப்பந்தத்தின் கீழ் வியட்னும் பிரச்னைக்கு தீர்வு

## பிரெஞ்சு - ரஷ்ய கூட்டறிக்கை

பாரிஸ், ஏப். 30

இந்தோசீன சம்பந்தமான ஜெனிவா ஒப்பந்தப்படிதான் வியட்னும் பிரச்னையைத் தீர்க்க முடியுமென பிரெஞ்சு—ரஷ்ய வெளிநாட்டு மந்திரிகள் விடுத்துள்ள கூட்டறிக்கையில் கூறியிருக்கிறார்கள்.

கம்போடியா சம்பந்தமாக விரைவில் சர்வதேச மகாநாடு நடைபெறும் என நம்புவதாயும், சீன, வடவியட்னும் ஆகியன இவ்விஷயத்தில் ஒத்துழைக்கும் என நம்புவதாயும் பிரிட்டிஷ் பிரதமர் திரு வில்சன் நம்பிக்கை தெரிவித்திருக்கிறார்.

கம்போடியா சம்பந்தமான சர்வதேச மகாநாட்டில் வியட்னும் பிரச்னையைச்சேர்ப்பதை சீனப் பிரதமர் சூ-என்-லாய் நிராகரித்திருக்கிறார். வியட்காங்கியர்கள் பிரதிநிதித்துவம் வகிக்கையில் வியட்னும் பிரச்னையை தீர்க்கமுடியாது என்றும் அவர் கூறினர்.

# வியட்காங் கோட்டையை அரசாங்க படைகள் பிடித்தன

சைக்கோன், ஏப். 30

அமெரிக்க ராணுவத்தை மானடானுக்கு 15 கிலோ மீட்டர் தூரத்தில் வியட்காங்கியரின் நிலத்தடி கொத்தளம் என்ற 2 தென்வியட்னும் டைவர்கள் நேற்று பிடித்தனர்.

அச் சண்டையில் 5 கொரில்லாக்கள் கொல்லப்பட்டனர். வெடிமருந்தும் கைப்பற்றப்பட்டது.

மெக்காங் நதிடெல்டாவில் மற்ருேர் சண்டையில் 86பேர் கொல்லப்பட்டனர். 84 பேர் சிறைப்பிடிக்கப்பட்டனர்.

வியட்காங்கியரின் முக்கியமான பயிற்சித் தளம் ஒன்றைப் பிடிக்க அரசாங்கத் துருப்புக்கள் தீவிரமுயற்சியில் ஈடுபட்டிருக்கின்றன. அவர்களுக்குதவியாக 84 ஹெலிகொப்டர்கள் அனுப்பப்பட்டிருக்கின்றன.

அதே சமயம் வடக்கு வியட்னும் மீது நடத்தப்பட்ட அமெரிக்க தாக்குதலில் 3 பாலங்கள் நாசம் செய்யப்பட்டன.

இதற்கிடையில் வியட்னும் பிரச்னையைத் தீர்க்க தனது 4 அம்சத்திட்டத்தை வடவியட்னும் மீண்டும் வற்புறுத்தியிருக்கிறது.

## பொருள்களின்விலை குறைக்க திட்டம்

பம்பலப்பிட்டி, வெள்ளி

பொதுமக்களுக்கு நியாயமான விலைகளில் உள்ளூரில் உற்பத்தியாகும் பொருள்கள் கிடைக்கக்கூடிய வகைசெய்யுமுகமாக அரசாங்கம் கைத்தொழில் அபிவிருத்தி திட்டப்பகுதியை ஆரம்பிக்க முடிவு செய்துள்ளது.

உள்ளூர் உற்பத்தி ஸ்தாபனங்களும் இதனுல் நன்மை அடையுமென அரசாங்கம் கருதியுள்ளது.

மேற்படி திட்டம் காலத்துக்குக்காலம் கைத்தொழில் அமைச்சருக்கு கைத்தொழில் திட்டம்பற்றியும் ஆலோசனை கூறுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# "இந்தியாவுக்கு எதிராக அமெரிக்க ஆயுதங்களை உபயோகிக்கக் கூடாது"

## 1954 முதலே பாகிஸ்தானுக்கு எச்சரிக்கை

வாஷிங்டன், ஏப். 30

நியாயமான தற்காப்பு வரம்புக்குட்பட்டே அமெரிக்க ஆயுதங்களை உபயோகிக்கவேண்டும் என்றும், ஆனல் கட்ச் பகுதியில் இதற்கான முகாந்திரம் எதுவும் இல்லை என அமெரிக்கா பாகிஸ்தானுக்குத் தெரியப்படுத்தியிருப்பதாயும் கூறப்படுகிறது.

அமெரிக்க ஆயுதங்களை உபயோகிப்பது குறித்து 1954-ம் ஆண்டிலேயே ஐஸன்ஹோவர் பாகிஸ்தானை எச்சரித்திருந்தார் என்பது சுட்டிக்காட்டப்படுகிறது.

1958-ம் ஆண்டில் வெளிநாட்டு மந்திரி திரு டல்லஸ் இந்தியாவுக்கெதிராகப் பாகிஸ்தான் அமெரிக்க ஆயுதங்களை உபயோகித்தால் இருநாடுகளின் உறவும் உடனடியாக முடியும் என எச்சரித்திருந்தார்.

20 மாதங்கள் சழித்து இந்தியாவிலுள்ள அமெரிக்கத் தூதரும் இதேபோன்ற கருத்தை வெளியிட்டார்.

தற்போதைய வெளிநாட்டு மந்திரி திரு. ரஸ்க் பாகிஸ்தான் அமெரிக்க ஆயுதங்களை இந்தியாவது உபயோகிப்பதற்கு எதிராக எச்சரித்திருந்தார்.

## பிரிட்டிஷ் குமாஸ்தாவின் தாராளம்

லண்டன், ஏப்ரல் 30

லண்டன் கடபல் கம்பெனியொன்றில் குமாஸ்தாவாக வேலைபார்க்கும் நடுத்தர வயதான ஒருவர் தமது குடும்பச் சொத்தான 1,20,000 பவுணிலிருந்து கிடைக்கும் வட்டியை ஒக்ஸ்பாம் ஸ்தாபனத்திற்கு நன்கொடை அளித்திருக்கிறார். இதன் மூலம் வருடமொன்றுக்கு 6,000 பவுண் வட்டியாகக் கிடைக்கிறது.

தன் பெயரை வெளியிட விரும்பாத அவர் பின்வருமாறு கூறினர்:

"என்னுடைய வேலையிலும், வாழ்க்கையிலும் நான் சந்தோஷமாக இருப்பதால் இந்த நன்கொடையை அளிக்கிறேன். இன்னும் அதிகமாக உதவி செய்வது என் விருப்பம். இப்பொழுது முதல்தடவையாக உண்மையான உதவி அளிக்கும் நிலையில் நான் இருக்கிறேன்."

இந்த உதவிப்பணம் உணவு, குடியிருப்பு, ஜனசமூக அபிவிருத்தி, விவசாயப பயிற்சி, தண்ணீர் சடலை போன்ற அம்சங்களுக்குப் பயன்படுத்தப்படும். உலகின் பல பகுதிகளுக்கு இந்த உதவி வழங்கப்படுகிறது.

# "சண்டையை நிறுத்தும்படி நட்புநாடுகள் கூறியுள்ளன"

## பாகிஸ்தான் அதிகாரி அறிவிப்பு

கராச்சி, ஏப் 30

கட்ச் பகுதியில் சண்டையை நிறுத்தும்படி பாகிஸ்தானை அதன் நட்பு நாடுகள் கேட்டுக்கொண்டிருப்பதாக கராச்சியில் வெளிநாட்டிலாகா அதிகாரி ஒருவர் கூறினர்.

இதற்கிடையில், கட்சில் சஞ்சர் கோட்டிற்கருகேயுள்ள நிலையிலிருந்து பாகிஸ்தானியர் விலகிச்செல்லக்கூடும் என டில்லியில் எதிர்பார்க்கப்படுகிறது. கட்ச் பகுதியில் கடந்த 24 மணிநேரமாக அமைதிநிலவுவதாயும், பாகிஸ்தான் துருப்புக்கள் தங்கள் நிலையில் தொடர்ந்து இருப்பதாயும் கராச்சியில் வெளிநாட்டு அதிகாரி ஒருவர் கூறினர்.

அதே சமயம் மேற்கு வங்க எல்லையில் பாகிஸ்தான் படைகள் குவிக்ப்பட்டுவருகின்றன. கூச்பீகாரிலும் பாகிஸ்தானிய அத்துமீறல்கள் அதிகரித்துவருகின்றன,

காஷ்மீரில் பாகிஸ்தானிய துருப்புக்கள் 45 முறை அத்துமீறியதாயும், மெஷின் துப்பாக்கிகள், மோட்டர்கள், ராக்கெட்டுகள், ரைபிள்கள் ஆகியவற்றை உபயோகித்து 10,000 தடவை சுட்டதாகவும் அறிவிக்கப்படுகிறது.

## சீன-ரஷ்யா ஒப்பந்தம்

மாஸ்கோ, ஏப்ரல் 30

சீனவும் ரஷ்யாவும் வர்த்தக ஒப்பந்தம் ஒன்று செய்துகொண்டிருக்கின்றன.

## ரயில்வேயில் கைகலப்பு

புதுடில்லி, ஏப்ரல் 30

இந்தூர் பிலாஸ்பூர் ரயில்வேயில் டிக்கட்டின்றிப் பிரயாணஞ்செய்த பிரயாணிகள்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கையை தொடர்ந்து ஏற்பட்ட கைலப்பில் 45 பேர் காயமடைந்தனர். 11 பேர் கைதாயினர்.

## ஆஸ்திரேலியாவும் சண்டையிடும

கான்பரா, ஏப்ரல் 30

தென்வியட்னுமில் வியட்காங்கியருக்கு எதிராகச் சண்டையிடும்பொருட்டு ஆஸ்திரேலியா ஒரு படைப்பிரிவை அனுப்ப முடிவுசெய்திருக்கின்றது. ஏற்கனவே 100 ஆஸ்திரேலிய ராணுவ அதிகாரிகள் அங்கு இருக்கிறார்கள்.

## அரசாங்க குமாஸ்தாக்கள் யாழ். கிளைக் கூட்டம்

யாழ்ப்பாணம், சனி

அரசாங்க குமாஸ்தாக்கள் சேவைச் சங்கத்தின் யாழ்ப்பாணக்கிளையின் வருடாந்தப் பொதுக் கூட்டம் சென்ற புதன்கிழமை மாலை கச்சேரியில் நடைபெற்றபோது பின்வருவோர் புதுவருட உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் திரு. என். ராஜரத்தினம், உபதலைவர்கள் திருவாளர்கள் எஸ் அருளம்பலம, எஸ், கணேசன், கௌரவ காரியதரிசி திரு. எஸ். இரத்தினசபாபதி. உபகாரியதரிசி திரு. எஸ அல்பிரட், கௌரவ பொருளாளர் திரு. பன்கிருஸ, உதவி-பொருளாளர் திரு. எஸ. பியதாசா,

கமிட்டி அங்கத்தவர்கள் திருவாளர்கள் வி. ராஜதுரை, வி. பொன்னம்பலம், ஜே.எப். லே தநாயகம், சிவானந்தன், எஸ. ராமேஸ்வரன், வி. சி, ராஜா, கே. பரமநாதன், எஸ செல்லையா, வைரமுத்து, எமர்சன், டி. எஸ. அமரசேன, ஏ. டபிள்யு. சமரக்கோன். ஏ, எம். டி' சில்வா, எச். ஏ. கபூர், எம். திருநாவுக்கரசு,

மத்திய கவுன்சிலின்பிரதிநிதிகள் திருவாளர்கள் எஸ. இரத்தினசபாபதி (கௌரவ காரியதரிசி), வி. பொன்னம்பலம்.

# ஸீட்டோவிலிருந்து பிரான்ஸ் விலகி விடக்கூடும்

## கட்ச் எல்லை நிலைபரிசீலனைக்குவரும்?

லண்டன், ஏப். 30

வியட்னும் யுத்தம் பரவும் அபாயமும், ஒப்பந்தத்திலிருந்து விலகுவதாகக் கூறும் பிரான்சின் பயமுறுத்தலும் இங்கு கூடியுள்ள சீட்டோ கூட்டுஸ்தாபனத்தின் ராணுவ ஆலோசகர்களை எதிர்நோக்கியுள்ளன;

இந்த மகாநாட்டைத்தொடர்ந்து அடுத்த வாரம் சீட்டோ நாடுகளின் வெளிநாட்டு மந்திரிகள் கூடவிருக்கிறார்கள்.

பிரெஞ்ச உதவியின்றி ராணுவத்திட்டங்களை ஒன்றுபடுத்தும் முயற்சில் ராணுவத்தலைவர்கள் இரகசிய மகாநாடு நடத்துகிறார்கள்.

வியட்னுமில் அமெரிக்க நடவடிக்கையில் பிரான்சை சம்பந்தப்படுத்த விரும்பாததால், ஒரு பார்வையாளரை அனுப்பட்டி கால் முடிவுசெய்திருக்கிறார்

ஆஸதிரேலியா, பிரான்ஸ, நியூஸிலாந்து, பாகிஸ்தான் பிலிப்பைன்ஸ, தாய்லந்து, அமெரிக்கா ஆகிய 8 நாடுகள் ஒன்றைத்தவிர, 7 நாடுகள் இக்கூட்டத்தில் கலந்துகொள்கின்றன. பிரெஞ்சு ராணுவ அதிகாரி ஒருவர் பார்வையாளர்களாக மட்டும் கலந்துகொள்வார்.

அடுத்த வாரம் வெளிநாட்டு மந்திரிகள் மகாநாட்டில் பிரான்சின் சார்பாக தாய்லந்திலுள்ள தனது தூதரை பார்வையாளராக அது அனுப்பும்.

பிரான்ஸின் இந்த முடிவு ஸீடோ ஒப்பந்தத்திலிருந்து முற்றுக அது விலகும் சாத்தியத்தை உண்டாக்கலாமென அஞ்சப்படுகிறது.

ராணுவ ஆலோசகர்கள் தென்கிழக்காசியாவில் ஒரு கூட்டு ராணுவத்திடம் சென்று ஆராயும் முயற்சியில் ஈடுபடுகிருர்கள்.

வியட்னும் தான் இதில் பிரதான விஷயம். எனினும் மலேஷியா தகராறும் ஆராயப்படும்.

அடுத்த மாதம் ஸீட்டோ ராணுவ ஒத்திகையிலிருந்து விலகியிருக்கும் பாகிஸ்தான், இக்கூட்டத்தில் கட்ச் எல்லை [illegible] தெரிகிறது. ஸீட்டோவின் [illegible] லாவோஸ், கம்போடியா விஷயமும் ஆராயப்படும்.

## முஸ்லிம்கள் விரட்டப்பட்டனராம்

கராச்சி, ஏப்ரல் 30

மேற்கு வங்காளத்திலிருந்து 24 முஸ்லிம் குடும்பங்கள் கிழக்குப் பாகிஸ்தானுக்கு விரட்டப்பட்டதாயும் முஸ்லிம்களின் 42 வீடுகள் தீ மூட்டப்பட்டதாயும் கராச்சி ரேடியோ அறிவித்தது;

## மதுரைக்கருகே துப்பாக்கிச் சூடு

மதுரை, ஏப்ரல் 30

இங்கிருந்து 25 மைல் தூரத்தில் குழப்பம் விளைவித்த 5000 பேர் கொண்ட ஜனக்கூட்டம் மீது பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் மூவர் காயமுற்றனர். பஞ்சாயத்துத் தேர்தல் சம்பந்தமாக இந்தக் குழப்பம் ஏற்பட்டதாம்,

## இடமாற்றம்

யாழ்ப்பாணம், வெள்ளி

கடந்த நான்கு வருடங்களாக யாழ்பாணம் மேகநோய் சிகிச்சை நிலையத்தில் கடமையாற்றிய சுகாதார பரிசோதகர் திரு. கே. அரிகேசலிங்கம் மே மாதம் முதலாந்திகதியிலிருந்து இறக்குவானைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

நவாலி, வெள்ளி

திரு டட்லி சேனநாயக்கா தலைமையிலுள்ள தேசிய அரசாங்கத்திற்குத் தாம் பூரண ஆதரவு தருவதாக நவாலி கிராமமுன்னேற்றச் சங்கம் இலங்கைப் பிரதமருக்கு அனுப்பிவைத்துள்ள கடிதமொன்றில் குறிப்பிட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "பூரண ஒத்துழைப்பு"

வவுனியா, வெள்ளி

தேசிய அரசாங்கத்தில் ஸ்தலஸ்தாபன மந்திரியாக செனட்டர் திரு எம் திருச்செல்வம் நியமிக்கப்பட்டதைப் பாராட்டி வாழ்த்துத் தெரிவித்து மந்திரிக்கு வவுனியா நகரசபை ஒரு செய்தியை அனுப்பி வைத்துள்ளது

'ஸ்தலஸ்தாபன மந்திரியாகத் தாங்கள் பதவியேற்றதையிட்டு நாம் பெரிதும் மகிழ்ச்சி அடைகின்றோம் தமிழ் மக்களை எதிர்நோக்கியுள்ள பல கஷ்டங்களையும் தீர்த்து வைத்து நாட்டை முன்னேற்றுவதில் அதிக கவனம் செலுத்துவீர்கள் என எதிர்பார்க்கின்றோம் உங்களுக்கும் அரசாங்கத்துக்கும் இச்சபை பூரண ஒத்துழைப்பு அளிக்கும்" என்று நகரசபைத் தலைவர் திரு எம் பொன்னையா இச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்

## குழப்பத்தில் முடிந்த போட்டி

ஊர்காவற்றுறை, வெள்ளி

புங்குடுதீவு விளையாட்டுக் கழகங்களிடையே நசரேத் சனசமூக நிலையத்தகரின் "அலெக்ஸ்சான்ரர்" வெற்றிக் கிண்ணத்திற்கான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி சமீபத்தில் புங்குடுதீவு முற்றவெளியில் நடைபெற்றபோது அதன் இறுதிக்கட்டம் இரு கோஷ்டிகளிடத்தில் ஏற்பட்ட அபிப்பிராய பேதத்தால் முடிவடையாமல் குழப்பத்தில் முடிந்தது.

REGAL - JAFFNA
NOW SHOWING
Richard Burton
Ava Gardner
Deborah Kerr
in
NIGHT of the IGUANA

## அங்குரார்ப்பணக் கூட்டம்

யாழ்ப்பாணம், சனி

"வாலிபர்கள் தான் ஒரு நாட்டின் சுதந்திரத்தைப் பேணிப்பாதுகாத்துக் கொள்ளக்கூடியவர்கள். அவர்களுடைய கையில்தான் இந்நாட்டுத் தமிழ்பேசும் மக்களின் சுதந்திரம் இருக்கிறது" என திருநெல்வேலி தமிழரசு வாலிப முன்னணிக் கிளை அங்குரார்ப்பணக் கூட்டத்தில் பேசிய நியாயவாதி திரு. எஸ். பொன்னையா குறிப்பிட்டார்.

திரு. எஸ். சரவணமுத்து தலைமையில் நடைபெற்ற இவ் வங்குரார்ப்பணக் கூட்டத்தில் நல்லூர் எம். பி. டாக்டர் ஈ எம். வி. நாகநாதன் பேசுகையில் தமது உடல்நலம் குறித்து அனுதாபம்தெரிவித்தவர்களுக்கு நன்றிதெரிவித்தார். திருவாளர்கள் முருகரத்தினம், ஆலாலசுந்தரம் உட்பட வேறு பலரும் பேசினர்.

உத்தியோகத்தர்கள் விபரம் வருமாறு: தலைவர்: எஸ். பொன்னையா, உபதலைவர்கள்: எஸ். ஏ. ஐயாத்துரை, கே. எஸ். நடராசா, எஸ். சரவணமுத்து, எஸ. தணிகாசலம், இணைக் காரியதரிசிகள்: நா. நவரத்தினம், சி. கனகசபாபதி, உபகாரியதரிசகள்: க. துரைமணி, வி கார்த்திகேசு, தனாதிகாரி: பொ. வைத்திலிங்கம்.

## ஆயுள்வேத சபை கூடுகிறது

பம்பலப்பிட்டி, வெள்ளி

ஆயுள்வேத கல்லூரி ஆலபத்திரிச்சபையின் கூட்டம் நாளை நடைபெறுகிறது. ஆயுள்வேதக்கல்லூரி அதிபர் பதவி காலியாக உள்ளதாகவும் இதுகுறித்து ஆலோசனை செய்யவுமே மந்திரி, சபையை விசேடமாகக் கூட்டியுள்ளார்.

## இடமாற்றம் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணம் மாவட்ட அரசாங்க உதவி அதிபர் திரு. ஏ. பெருமைமிழுரின் இடமாற்றம் தற்காலிகமாகநிறுத்திவைக்கப் பட்டுள்ளது.

## விசைத்தறி நெசவுநிலையம்

ஊர்காவற்றுறை, வெள்ளி

தீவுப்பகுதி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க சமாஜம் சுமார் இரண்டுலட்ச ரூபா முதலீடுசெய்து மின்விசைத் தறிகளை உடைய நெசவுநிலயத்தை நிறுவ முடிவுசெய்துள்ளது.

இதற்கான ஆலோசனைக் கூட்டம் ஒன்று சென்ற சனிக்கிழமை சமாசத்தின் தலைமைக் காரியாலயத்தில் திரு. நீச்வே தலைமையில் நடைபெற்றது. கூட்டுறவு ஆணையாளர் திரு. பொன்னுத்துரை தலைமைக்காரியாலய பரிசோதகர் திரு. மகேந்திரன் ஆகியோரும் இக் கூட்டத்தில் கலந்து கொண்டு விசைத்தறி நெசவு நிலையத்தின் ஆக்கம்பற்றி எடுத்துரைத்தனர்.

தீவுப்பகுதியில் உள்ள கூட்டுறவுச்சங்கங்களிடம் பொருள் உதவிபெற்று நெசவுஆலையை நிறுவுவதென இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. பெரும்பாலும் இந்நிலயம் வேலணையில் உள்ள சாட்டியில் நிறுவப்படலாம் எனத் தெரிகிறது.

## மந்திரியிடம் கமிஷன் கோரிக்கை

பம்பலப்பிட்டி, வெள்ளி

உள்ளூராட்சி சேவைக் கமிஷன் நிறுவப்படுமுன்னர் உள்ளூராட்சி சேவையில் சேர்ந்த ஸ்தலஸ்தாபன ஊழியர்களுக்கும் பூரண பென்ஷன் வசதி அளிக்குமாறு கமிஷன் ஸ்தலஸ்தாபன மந்திரியிடம் கோரியுள்ளது.

ஸ்தலஸ்தாபனங்களில் கடமையாற்றும் ஊழியர்களின் நடத்தை குறித்த விசாரணை நடத்த கமிஷனுக்கு அதிகாரம் அளிக்கும் வகையில் சில சட்டங்கள் திருத்தப்பட வேண்டும் எனவும் கமிஷன் கோரியுள்ளது.

## என். கியூ. டயஸ் ஓய்வு பெறுகிறார்

பம்பலப்பிட்டி, வெள்ளி

மேமாதம் இரண்டாம் திகதியிலிருந்து திரு. என் கியூ. டயஸ அரசாங்க சேவையிலிருந்து ஓய்வு பெறுகிறார் மார்ச் மாதக் கடைசிப்பகுதியில் இவர் ஓய்வு பெறுவதற்கு பத்திரத்தை சமர்ப்பித்தாரெனினும் மார்ச் பிற்பகுதி தொடககம் மே 2-ம் திகதிவரை அவர் ஓய்வுபெறுவதற்கான லீவில் அனுமதிக்கப்பட்டார். மே மாதம் 2-ம் திகதி அவர்உத்தியோகபூர்வமாக ஓய்வுபெறுகிறார். இவர் பாதுகாப்பு அமைச்சின் நிரந்தரக்காரியதரிசியாகக் கடமையாற்றியவர்.

## பயிர்ச் செய்கையில் அக்கறை

ஊர்காவற்றுறை, சனி

தீவுப்பகுதியில் உப உணவுப்பயிர்களை அபிவிருத்தி செய்யும் பொருட்டு தீவுப்பகுதி விவசாயப்பகுதியினரால் ஓர் பிரசாரப் பொதுக் கூட்டம் நேற்றுமாலை புளியங்கூடல் சனசமூகநிலைய முன்றலில் நடத்தப்பட்டது.

சரவணை, காரந்தனை வேலணை மேற்கு ஆகிய இடங்களில் இருந்து வந்த கமக்காரர்கள் பலர் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

இப்பிரசாரக் கூட்டத்தையொட்டி விவசாயப் பட்சிகாட்சியும் நடைபெற்றது.

## பருத்தித்துறையில் இந்துமாமன்றம்

பருத்தித்துறை, வெள்ளி

பருத்தித்துறையில் இளைஞர் இந்து மாமன்றம் என்ற பெயரில் புதிய ஸ்தாபனம்ஒன்று விரைவில் உருவாக்கப் படவிருக்கிறது.

இந்தஸ்தாபனத்தை அமைக்கும் நோக்கமாக நேற்றயதினம் மாலை ஆசிரியர் திரு த. பத்மநாதன் தலைமையில் ஆலோசனைக் கூட்டமொன்று நடைபெற்றபோது திருவாளர்கள் ஆர். இரத்தினசபாபதி, ப. இராமலிங்கம், க. சுப்பிரமணியம் முதலானபலர் இம்மன்ற அவசியம் பற்றி உரை நிகழ்த்தினர்.

கூட்டமுடிவில் வட்மராட்சியின் பல கிராமசேவகர்கள் பிரிவிலும் இருந்து வாலிபர்களைக் கொண்ட பொதுக் கூட்டமொன்றை மேமாத இறுதி வாரத்தில் கூட்டுவதென முடிவுசெய்யப் பட்டது.

## மின்சார விநியோகம் சீராகும்

பருத்தித்துறை, வெள்ளி

பருத்தித்துறை நகரசபை எல்லைக்குட்பட்ட மின்சாரபாவனையாளர்கட்கு விரைவில் நல்லகாலம் ஏற்பட்டிருப்பதாக தெரியவருகிறது.

பருத்தித்துறை நகரசபை நிர்வாகம் மின்சார இணைப்புக் கம்பிகளையும் தூண்களையும் மாற்றிப் புதிதாக அமைப்பதற்கு அரசாங்கத்திடம் சுமார் 88 ஆயிரம் ரூபாவரை கடனுக் கேட்டிருக்கிறது. இக்கடன் தொகை விரைவில் கிடைக்கலாமெனவும் கிடைக்கும்பட்சத்தில் மின்சார புனரமைப்பு வேலைகள் துரிதமாகலாம் எனவும் அதிகாரியொருவர் நிருபரிடம் தெரிவித்தார்.

## மென்பந்தாட்ட கிரிக்கெட்

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணம் மென்பந்தாட்டக் கிரிக்கெட் சங்கத்தினரால் இவ்வாண்டு நடாத்தப்படும் மென்பந்தாட்டக்கிரிக்கட் போட்டியில் பங்குபற்றும் கழகங்களை மேற்படி சங்கத்தினர் மூன்று பிரிவுகளாகப் பிரித்திருக்கின்றனர். மூன்று பிரிவுகளின் விபரம் பின்வருமாறு:-

**"ஏ" பிரிவு**

"பல்லயன்ஸ்" விளையாட்டுக் கழகம்.

"லயன்ஹட்" விளையாட்டுக் கழகம்.

"அரியாலை யுனைட்டட்" விளையாட்டுக் கழகம்.

**"பி" பிரிவு**

"கென்னடி மெமோறியல்" விளையாட்டுக் கழகம்.

"சென். ஜோசப்" விளையாட்டுக் கழகம்.

"எடிக்கேசன் டிப்பாட்மென் றெக்கிறியேசன்" கழகம்.

**"சி" பிரிவு**

"ஓ. எல். ஆர். ஸ்கைலக்ஸ்" விளையாட்டுக் கழகம்.

"டீவன்ஸ்" விளையாட்டுக் கழகம்.

"கிறீன்பீல்" விளையாட்டுக் கழகம்.

"யங்டைகஸ்" விளையாட்டுக் கழகம்.

இப்பிரிவுக் கழகங்கள் விளையாடும் திகதிகளின் விபரம்:-

**"ஏ" பிரிவு**

லயன்ஹட் — பல்லயன்ஸ் 2-5-65.

பல்லயன்ஸ் — அரியாலை யுனைட்டட் 9-5-65.


அரியாலை யுனைட்டட் — லயன்ஹட் 14-5-65.

**"பி" பிரிவு**

கென்னடி மெமோறியல் — சென். ஜோசப் 2-5-65.

(5-ம் பக்கம் பார்க்க)

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) ராஜ் (நீர்கொழும்பு)
நவா (கும்பனித்தெரு) விஜயா (மட்டக்களப்பு) மொடர்ன் (பண்டாரவளை)
விஜிதா (ஹட்டன்) தீவொலி (துவரேலியா) ஜுப்பிட்டர் (குருநாகலை)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி மாலை 6-30, 9-30



எம். ஜி. ராமச்சந்திரன்
சாவித்திரி
மற்றும் பலர் நடித்த
வேட்டைக்காரன்



குதூகல வாழ்வுக்கு மார்க்கம் நல்ல ஆரோக்கியமே!
இதை அளிக்கிறது
நேத்திராலோகதைலம்

இது பீனிசம், தடிமன், நரம்புவலி போன்றவியாதிகளிலிருந்தும் தலையிலும் கண்களிலும் ஏற்படும் எல்லாவித வருத்தங்களிலிருந்தும் உங்களை பாதுகாக்கிறது.

நேத்திராலோகத் தைலம் கண்களுக்கு. இதமளித்து தலைக்கு குளிர்மையளித்து பொடுகு, இளநரை ஆகியவை ஏற்படாமல் தடுத்து கூந்தலை ஆரோக்கியமுடன் நீண்டு வளரச் செய்கிறது.

தினசரி நேத்திராலோக தைலத்தை பாவியுங்கள்.

½ போத்தல் ரூ. 3/- தபால் செலவு சதம் /-85.
வி. பி. பி. ஓடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

இலவச ஆலோசனைகளுக்கு தினசரி காலை 8-30 மணியிலிருந்து மாலை 4-30 மணிவரை டாக்டர் ஒருவர் இருப்பார்.



★

டப்ளியூ. கே. ஜினதாஸ,
ஆயுர்வேத வைத்தியர்,
161, நோரிஸ் ரோடு,
கொழும்பு-11.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மென்பந்தாட்ட...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

சென், ஜோசப் — எடிக்கேசன் 9-5-65.

எடிக்கேசன் — கென்னடி மெமோறியல் 16-5-65.

"சி" பிரிவு

ஓ. எல். ஆர். — யங்ஸ்டைகஸ் 2-5-65,

டவ்ஸ் — கிறீன்பீல் 9-5-65.

கிறீன்பீல் — ஓ. எல். ஆர். 16-5-65.

யங்ஸ்டைகஸ் — டவ்ஸ் 16-5-65.

கிறீன்பீல் — யங்ஸ்டைகஸ் 23-5-65.

ஓ. எல். ஆர். — டவ்ஸ் 6-5-65.


நகைகளுக்கு

யப்பான்

ஜுவலர்ஸ்

64, கன்னாதிட்டி,

யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 518 தந்தி: "யப்பான்"


## அரசியல்...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

எமது சங்கம் எந்த அரசியல் இயக்கத்தையும் சார்ந்தது அல்ல. நடுவழிக் கொள்கையைப் பின்பற்றி எமது உரிமைகளைப் பெறுவதுதான் எமது நோக்கம். அத்துடன் அரசியல் தலைவர்கள் தொழிற் சங்கங்களிலே ஆதிக்கம் செலுத்துவதையும நாம் ஆரம்ப முதலே எதிர்த்து வந்துள்ளோம்.

அண்மையில் கௌரவ தொழில், வேலைவாய்ப்பு, வீடமைப்பு அமைச்சர் கூறியதிட்டம்போல தொழிற் சங்கங்களின் தலைமைப்பதவிகளில் அரசியல்வாதிகள் அமர்வதை தடுக்க வேண்டும். தொழிலாளர்களாகிய நாம், முதலில் எம்காலில் நிற்க வேண்டும். பிறருடைய உதவியுடன் நின்று கொள்ளப் பழகினால் அவர்கள் இழுக்கும்வழிக்கெல்லாம்நாம் இழுபட வேண்டிய பரிதாபமேற்படும். ஆகையால் இம் மேதினத்தில் நாம் எமது தொழிற்சங்கங்களிலுள்ள பதவிகளுக்கு அரசியல்வாதிகளை தெரிவு செய்து அவர்களிடம் எமது உரிமைகளை அடகு வைக்கமாட்டோம் என திட சங்கற்பம் பூண்டு கொள்ள வேண்டும். அரசியல் கலப்பில்லாமல் தொழிற்சங்கங்கள் செயல்பட்டால் எமது உரிமைகளைப் பெற்றுக் கொள்ளுவதற்கு எவ்வித இடையூறுமில்லாது பலதரப்பட்ட வர்களுடைய ஆதரவையும் பெற்றுக் கொள்ளலாம்.

மேதினத் திருநாளில்காணப்படும் ஒற்றுமையும் ஒலிக்கும் உறுதிக்குரல்களும் என்றும் நிலைத்திருக்க வேண்டும், சாதி, சமய வேறுபாடின்றி உழைப்பாளர்களின் உரிமைக்கும் நன்மைக்கும், நலத்துக்கும்போராடுவதை ஒவ்வொரு தொழிற் சங்கமும் தனது அடிப்படை நோக்கமாகக் கொள்ள வேண்டும் என்பதே எமது சங்கத்தின் பேரவா.

## 'ஈழநாடு' மாத உதவித்திட்டம்

யாழ்ப்பாணம், சனி

ஈழநாடு குழுவினி நிதிச்சபையினர் ஆரம்பித்த மாதாந்த உதவித் திட்டத்திற்கு கரவெட்டியைச் சேர்ந்த டாக்டர் எஸ். இராஜரத்தினம் வைகாசி மாதத்திற்கான 25 ரூபாவை அனுப்பிவைத்துள்ளார்.


### விற்பனைக்கு

பரப்பு: 1 1/2. No. 12/18, கன்னாதிட்டி ஒழுங்கை, யாழ்ப்பாணம். விபரங்களுக்கு: விளம்பர இல: 217. ஈழநாடு மேற்பார்த்து, யாழ்ப்பாணம். 217

தொய்வு, கசம், நீரிழிவு, வெள்ளை முதலிய பலகொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய கற்றலோக் இனும், மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சைபெற்று வியந்துள்ளனர். வைத்தியர் பரிபூரணநந்தர், கைலாசபிள்ளையார்கோவிலடி, யாழ்ப்பாணம்.

### அழைப்பு

தலைமை ஆசிரியர் (காலஞ்சென்ற) ஜெகப் நாகமணி முருகுப்பிள்ளை அவர்களின் ஷதோத்திர ஆராதனையும் ஞாபகார்த்த விழாவும் 1-5-65 சனிக்கிழமை முன்னைத்தீவைச் சேர்ந்த தண்ணீரூற்று பரி. மத்தியாஸ் தேவாலயத்தில் நடைபெறும், அன்பர்களை அன்புடன் அழைக்கின்றோம். மேரி பொன்னுப்பிள்ளை J. M. செல்வத்துரை, J. M. கேசரத்தினம், மகேஸ்மணி துரைராசா, S. M. தம்புத்துரை' ஞானமணி நடராசா, தண்ணீரூற்று. முள்ளியவளை. 98

### CLASSES

Admissions new accepted for B. A., G. A. Q., G. C. E. Advanced Level, G C E Ordinary Level, G C E Prep; English / Tamil Shorthand; Typewriting, Book - keeping Commerce; Sinhala; Special Evening classes in English, Mathematics, Physics Chemistry, Biology.

UNITED INSITUTES, Nelliady, Karavedi, / 107, Point Pedro Road, Nallur, Jaffna. 100

### வாடகைக்கு

கச்சேரிக்கு சமீபமாக சகல வசதிகளுடன் கோவில் (Temple Road) 36-ம் இலக்க மாடி வீடு வாடகைக்கு விடப்படும், விபரங்கட்கு: S. சிற்றம்பலம், 28, செம்பின் ரோட், யாழ்ப்பாணம். 216

### தேவை

எமது தயாரிப்புகளை விற்பனை செய்வதற்குப் பெண்களும், ஓடர்கள் எடுப்பதற்கு அநுபவம் வாய்ந்த பிரதிநிதிகளும் தேவை. பெண்களுக்கு வாகன வசதியுண்டு. தகுந்த வேதனம் வழங்கப்படும். விண்ணப்பிக்க: மனேஜர், இலங்கை லபோறற்றரீஸ், உடுவில், சுன்னாகம், 211

நன்கு சமைக்கத் தெரிந்த சமையல்காரன் தேவை, வயது 16க்கு மேல் 20க்குள் இருக்க வேண்டும். 120, ஆஸ்பத்திரி ரோட், யாழ்ப்பாணம், நேரில் வந்து காணவும். 219

### குத்தகைக்கு

வேம்படி மத்தியகல்லூரிக்கு அருகாமையில் ஒரு கல்வீடு குத்தகைக்குக் கொடுக்க இருக்கிறது. தேவையானவர்கள் 120, ஆஸ்பத்திரி ரோட், யாழ்ப்பாணத்தில் வந்து காணவும், போன்: 420, தொடர்புகொள்ளவும். 220

72/1 கடை, ஆஸ்பத்திரி ரோட்டு, யாழ்ப்பாணத்தில் குத்தகைக்குக் கொடுக்க இருக்கிறது. தேவையானவர்கள் 120, ஆஸ்பத்திரி ரோட்டில் வந்து காணவும். போன்: நெ: 420. 218



எனக்கு

மிகவும்

பிரியமானது



கன்டொஸ்

உயர்ந்த ரகச் சொக்கலேற்று




ஏகவிநியோகஸ்தர்கள்:


ஷோ வலஸ் அன் ஹெஜெஸ் லிமிட்டெட்,

கொழும்பு - 3.

தங்கமுலாம் பூசப்பட்ட கவர்ச்சிகரமான

**சவரின் வளையல்கள்**

ஐந்துவருடம் உத்தரவாதம் பெற்றவை




உண்மையான தங்கநகைகளுக்கு நிகரானது. அழகிலும் உருவ அமைப்பிலும் சவரின் தங்கநகைகளுக்கு ஒப்பானது. சகல வைபவங்களுக்கும் உபயோகிக்கக்கூடிய வகையில் நவீன உருவ அமைப்புக் கொண்டவை. தங்கமுலாம் பூசப்பட்ட சவரின் வளையல்கள் பற்றிய எங்களின் நிபந்தனைகள்:- உத்தரவாதமளிக்கப்பட்ட குறிப்பிட்ட கால எல்லைக்குள், நிறம் மற்றும் சகல வளையல்களும் கட்டணம் எதுவுமின்றி மீண்டும் தங்கம் பூசிக்கொடுக்கப்படும். எங்களால் பொறுப்பேற்கப்படும் ஆடர்கள் வி. பி. பி. யில் அனுப்பிவைக்கப்படும்.

M 43, M 39, M 41, M 36, M 3, M 35
M 37, M 36, M 40, M 46, —
எந்த ஜோடி உருவ அமைப்புக்கொண்ட
ஒரு ஜோடியின் விலை ரூபா 5-00

M 42 ஜோடி ரூ. 6-00, M 30 ஜோடி ரூ. 7-00 M31 ஜோடி ரூ. 8-50. M 27 ஜோடி ரூ. 12-50, M 32 ஜோடி ரூ. 12-50, M 49 ஜோடி ரூ. 15-00. M 29 ஜோடி ரூ. 15-00 M 47 ஜோடி ரூ. 18-50.

**ஈ. பிரான்சிஸ் பெரேரா அன்ட் கம்பனி**

12, யட்டிநுவர வீதி, கண்டி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடுத்த நடவடிக்கை: பாகிஸ்தான் ஆராய்ந்தது

# எல்லை நெடுகிலும் படைபலம் அதிகரிக்கப்பட்டது

## பொதுப்படை திரட்ட பாகிஸ்தான் உத்தரவு

ராவல்பிண்டி, ஏப். 29

இந்திய-பாகிஸ்தானின் உறவுகளை விருத்தி செய்வதா அல்லது துண்டிப்பதா என்பதை இறுதியாக நிர்ணயிக்கும் பொருட்டு இன்று பாகிஸ்தானின் மந்திரிசபை அவசரமாகக் கூடி ஆராய்ந்தது. இந்த விசேஷ மந்திரிசபைக் கூட்டத்துக்கு பாகிஸ்தான் அதிபர் பீல்ட் மார்ஷல் அயூப்கான் தலைமை வகித்தார். இந்தியப் பிரதமர் சாஸ்திரி, மற்றும் பல்வேறு நாட்டுத் தலைவர்கள் விடுத்திருந்த கோரிக்கைகள் மந்திரிசபைக் கூட்டத்தில் ஆராயப்பட்டன.

இதற்கிடையில் பாகிஸ்தான் தனது படைபலத்தை அதிகரிக்க துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன பொதுப் படையொன்றைத் திரட்ட பாகிஸ்தான் அரசாங்கம் உத்தரவிட்டுள்ளதுடன் கிழக்குப் பாகிஸ்தான், மேற்கு வங்காள எல்லை நெடுகிலும் ஏராளமான பாக். துருப்புக்கள் குவிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த இரண்டு தினங்களாக நெருக்கடி தணிந்திருந்த பியர்பேட் பகுதியில் இன்று நிலைமை மோசமாகக்காணப்பட்டது இரண்டு நாள் ஓய்வையும் பாகிஸ்தான் 'மிகவும் தந்திரமான' முறையில் பயன்படுத்தியிருக்கிறதென்றும் பெரிய தொரு தாக்குதலுக்கு பாகிஸ்தான் திட்டமிட்டு வருகிறதென்றும் இந்திய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன

### அமெரிக்கா அறிவிப்பு?

இந்திய-பாகிஸ்தான் எல்லைச் சண்டையில் பாகிஸ்தான் அமெரிக்க ஆயுதங்களை உபயோகிக்கக்கூடாதென்று பாகிஸ்தானுக்கு அமெரிக்கா அறிவித்திருப்பதாகத் தெரியவருகிறது எல்லைச் சண்டையின் போது பாகிஸ்தான் உபயோகித்த அமெரிக்க டாங்கிகளின் படங்களை அமெரிக்க உயர் அதிகாரிகள் இப்பொழுது பரிசீலனை செய்து வருவதாக வாஷிங்டன் செய்திகள் கூறுகின்றன

### இஸ்வெஸ்டியா எச்சரிக்கை

இந்திய-பாகிஸ்தான் எல்லைச்சண்டை தீவிரமடைவதால் வியட்னாமில் நெருக்கடி ஏற்பட்டிருப்பதாக ரஷ்யப் பத்திரிகையான 'இஸ்வெஸ்டியா' தெரிவித்துள்ளது

### கடைசி செய்தி

எல்லைச்சண்டை குறித்து மேற்கொள்ளப்படவேண்டிய அடுத்த நடவடிக்கை குறித்து பாகிஸ்தானின் மந்திரிசபைக் கூட்டத்தில் ஆராயப்பட்டதாகவும் இக்கூட்டம் மூன்று மணி நேரம் வரை நடைபெற்றதாகவும் கடைசிச் செய்திகள் கூறுகின்றன

'யாழ்ப்பாணம்

# உஷ்ணபூமிதான்; ஆனால் மக்கள் நல்லவர்கள்'

## போலந்து தூதரக பிரதிநிதி பேட்டி

யாழ்ப்பாணம், வெள்ளி

'யாழ்ப்பாணம் சிறிது வெப்ப சுவாத்தியமுள்ளதாக இருந்தாலும் இங்குள்ள மக்கள் கடும் உழைப்பாளிகளாகவே காணப்படுகின்றனர். யாழ்ப்பாண மக்கள் நல்ல சுபாவமுள்ளவர்கள் என்பதுவே எனது அபிப்பிராயம்.'

இவ்வாறு இலங்கையிலுள்ள போலந்து ஸ்தானிகராலய வர்த்தக பிரதிநிதி, திரு. ஜோசேவ் சாக்கிவிக்ஸ் நேற்று 'ஈழநாடு' காரியாலயத்துக்கு விஜயம் செய்தபோது நமது நிருபருக்களித்த விசேஷ பேட்டியொன்றில் தெரிவித்தார்,

குரும்பசிட்டி உதயதாரகை சன சமூக நிலையத்தின் ஆதரவில் நடைபெற்ற கலைவிழாவில் கலந்துகொள்வதற்காக யாழ்ப்பாணம் வந்த திரு. சாக்கிவிக்ஸ் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்ப்பாணத்தில் உள்ள தொழிலாளர்கள் பொதுவாக கூலிகள் நல்ல சம்பளம் பெறுவதாக நான் அறிந்தேன் இது பற்றி நான் மகிழ்ச்சி அடைகின்றேன். யாழ்ப்பாண மக்கள் தமது உழைப்பின் மூலம் மேலும் முன்னேற்ற மடைய வேண்டுமென்பதுவே நான் அவர்களுக்கு விடுக்கும் செய்தி.

போலந்தின் கைத்தொழில் வளர்ச்சி பற்றி அவர் தெரிவிக்கையில் போலந்து கைத்தொழிலில் முன்னேறிவருகிறதென்றும் தனக்குத் தேவையான பெரிய இயந்திரசாதனங்களை கிழக்கு ஜெர்மனி போன்ற நாடுகளில் பெற்று வருகிறதெனவும் குறிப்பிட்டார்.

திரு. ஜோசேவ் சாக்கி இரண்டாவது உலக யுத்தத்தில் சுதந்திர போலந்து விமான சேவையில் சேர்ந்து பல போர் முனைகளில் எதிர்ப்புகளைச்சமாளித்தவர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

**மேதின விழா**

**1-5-65**

யாழ். நகர மூன்றல்

ஊர்வலம்: கல்வியங்காடு சந்தையிலிருந்து 4-30க்குப் புறப்படும்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இலங்கைத் தமிழரசு வாலிப முன்னணி

# மந்திரியின் வவனியா விஜயம்

## பாதிக்கப்பட்ட பகுதிகளை நேரில் பார்வையிடுவார்

வவனியா, வியாழன்

ஸ்தல ஸ்தாபன மந்திரி செனட்டர் எம். திருச்செல்வம் கியூ. ஸி. அடுத்த மாத நடுப் பகுதியில் வவனியாவுக்கு விஜயம் செய்து, சூறாவளியினால் பாதிக்கப்பட்ட பகுதிகளை நேரில் பார்வையிடவிருக்கிறார். மந்திரி திருச்செல்வத்துடன் நிரந்தரக்காரியதரிசியும் இங்கு விஜயம் செய்வார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

வவனியா நகரசபைத் தலைவர் திரு எம் பொன்னையா, அண்மையில் ஸ்தலஸ்தாபன மந்திரியைச் சந்தித்து சூறாவளியினால் அதிகமாகப் பாதிக்கப்பட்ட வவனியா, முல்லைத்தீவுப் பகுதிகளுக்கு நேரில் விஜயம் செய்து நிவாரண வேலைகளை ஆரம்பிக்கும்படி கேட்டிருந்தார்

சூறாவளியால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு தாம் விஜயம் செய்வதாகவும், நிதி உதவியுடன் சகல நிவாரண உதவிகளைச் செய்ய தாம் நடவடிக்கை எடுப்பதாகவும் மந்திரி திருச்செல்வம் நகரசபைத் தலைவருக்கு உறுதியளித்துள்ளார்

—

### "தனித்தன்மை :..

(1-ம் பக்க தொடர்ச்சி)

நம்பி செயற்பட்டுவரும் இயக்கங்களைப் பாராட்டுகிறேன். தூங்கிக்கிடந்த தமிழ்பேசும் தொழிலாளர் யாவரும் விழித்துக்கொண்டுவிட்டனர். தம் சொந்தப் பலத்தில் அவர்கள் நம்பிக்கை கொண்டுவிட்டனர் அதனால் தமிழ்பேசும் தொழிலாளரைச் சூழ்ந்துவந்த பகை பொடிப்பொடியாயிற்று.தேசிய அரசாங்கத்தை ஆதரிப்பதன் மூலம் எமது தனித்தன்மையைப் பேணிக்காக்கும் அதே வேளையில் நாட்டு நன்மையின் பொருட்டு நாட்டில் ஜனநாயகம் காப்பாற்றப்படும்பொருட்டு நாட்டு மக்களில் அக்கறை கொண்ட சமசமாஜ சகோதர சிங்களத் தொழிலாளரோடு கைகோர்த்து மேதினப் பவனி வருவோம். வாழ்க தொழிலாளர். வாழ்க மேதினம். வாழ்க தேசிய ஒற்றுமை.

—

யாழ்ப்பாணம், சனி

ஞாயிற்றுக்கிழமை அன்று இடபராசியில் ஆறு கிரகங்கள் ஒன்றுசேரவிருப்பதை யிட்டு சுன்னாகம் ஸ்ரீகதிரமலை சிவன் தேவஸ்தானத்தில் நட்சத்திர, லட்சஹோமம், ... நடைபெறும்.

# காட்டுப்பகுதியில் வீடமைப்புத் திட்டம்

## நடுத்தர மக்களுக்கு புனர்வாழ்வு

வவனியா, வியாழன்

வவனியா நூற்றிப்பத்தாவது கட்டையில் அநுராதபுரம் வீதியில் சுமார் ஐம்பது ஏக்கர் காட்டு நிலத்தில் வீடமைப்புத் திட்டமொன்றை மேற்கொள்ள விரைவில் நடவடிக்கை எடுக்கப்படவிருப்பதாக வவனியா நகரசபைத் தலைவர் திரு. எம். பொன்னையா தெரிவித்துள்ளார்.

"அண்மையில் ஏற்பட்ட சூறாவளியினால் இப்பகுதியிலுள்ள ஏராளமான மக்கள் தங்களது வீடுகளை இழந்துள்ளனர். வீடில்லாது இப்பொழுது பலர் கஷ்டப்படுகின்றனர். இவர்களின் குறைகளை நீக்க உடனடியாக நடவடிக்கைகள் மேற்கொள்ளத் திட்டமிட்டு வருகின்றோம். இதுகுறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டிருக்கிறோம் என்றும் அவர் தெரிவித்தார்,

"சூறாவளியினால் இப்பகுதி காட்டிலுள்ள ஏராளமான தேக்குமரங்கள் முறிந்து விழுந்துவிட்டன. அதிகமான தேக்குமரங்கள் சேதமுற்றப் பகுதியில், நடுத்தர வகுப்பினருக்கென வீடமைப்புத் திட்டமொன்றை மேற்கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இதற்கு முன்னோடியாக குறிப்பிட்ட பகுதிகளில் புதிதாக தேக்கங் கன்றுகளை நாட்டுவதற்கு அனுமதி வழங்குவது தற்காலிகமாக நிறுத்திவைக்கப்படும் புயலினால் முறிந்து விழுந்த தேக்கு மரங்களை அகற்ற இப்பொழுது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது இதுகுறித்து நகர பட் அமைப்பாளரிடமிருந்து பதில் கிடைத்த பின்னர் மேற்படி நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும்" என்றும் திரு பொன்னையா குறிப்பிட்டார்

குறிப்பிட்ட திட்டத்தின் கீழ் மூன்று முறிப்பு சிங்களப் பாடசாலைக்கென மூன்று ஏக்கர் காணி ஒதுக்கப்பட்டுள்ளது.

—

### புதிய நம்பிக்கை ..:

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பெறமுடியாது தத்தளித்தாலும் ஒருபுது நம்பிக்கையோடு இந்த ஆண்டு மே தினத்தை தமிழ்ப்பேசும் மக்கள் கொண்டாடுகின்றனர். ஆயினும் இனத்தின் உரிமை பரிபூரணமாகக் கிடைக்கும்வரை மொழி வழிபிரிந்து தமக்குள் ஒற்றுமையை வளர்த்து தமது உரிமைப் போரைத் தொடர்ந்து நடத்துவதைத் தவிரத் தமக்கு வேறுவழியில்லை என்பதை தமிழ்ப்பேசும் மக்கள் நினைவிலிருத்திக் கொள்ள வேண்டும், அடிமை ஒழிக்கவும் சமதர்மம், சம உரிமை தழைக்கவும் இதுவே மார்க்கம்.

—

# நெடுந்தீவுக்கு நாளை அமைச்சர் விஜயம்

கொழும்பு, வெள்ளி

நெடுந்தீவு மக்களின் குறைகளை நேரில் ஆராய்ந்தறியும் பொருட்டு ஸ்தலஸ்தாபனமந்திரி திரு எம். திருச்செல்வம் ஞாயிற்றுக்கிழமை நெடுந்தீவுக்கு விஜயம் செய்வார்.

நெடுந்தீவு மக்களின் குடிதண்ணீர் கஷ்டம். குழாய்நீர் விநியோகத் திட்டம் ஆகியவை பற்றியும் மற்றும் பிரச்சனைகள் பற்றியும் நெடுந்தீவு கிராம சபையினருடனும் இதர அதிகாரிகளுடனும் அமைச்சர் ஆலோசனைசெய்வார்.

தீவுப்பகுதி எம்.பி. திரு வி. நவரத்தினத்துடன் நெடுந்தீவு செல்லும் அமைச்சர் திருச்செல்வம், அனலைதீவு, எழுவைதீவு ஆகிய இடங்களுக்கும் அவர் விஜயம் செய்வார்: இத்தீவுகளின் கிராமசபைகள் அமைச்சருக்கும் எம்.பிக்கும் பொது வரவேற்பளிக்கும்.

### தொழிலாளியும்...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒலித்தன.

பலதட்வை ஆர்ப்பாட்டங்கள் நடந்தன. மிரட்டலும் அலட்சியமும் அவ்வப்போது கிளர்ச்சிகளை அடக்கிவைத்ததேதவிர—பூண்டோடு அழித்து விடவில்லை

1886 ஆண்டு மே தினங்கள் 1-ம் நாள் சிக்காகோ நகரம் அமர்க்களப்பட்டது. அமெரிக்க தொழிலாளர்கள் பெருங் கூட்டமாக கூடி வந்தார்கள், உரிமைகோரி உயிரைவிடவும் தயார் என்ற கோஷத்துடன் அந்த நேரத்தில் தொழிலாளர் படைக்கு எதிர்ப்புறமாக பாய்ந்து வந்துகொண்டிருந்தது. அரசாங்க படைகள் நீட்டிய துப்பாக்கி, கூரிய வாள்கள், குளம்பொலி எழுப்பும் குதிரைகள். உரிமைக்குப் போராடும் தொழிலாளர் அணிக்குள் பாய்ந்தன, வீதியில் ரத்தவெள்ளம் ஓடிக்கொண்டிருந்தது. அதில் அறுபட்ட தலைகளும், உயிரற்ற உடல்களும் மிதந்துகொண்டிருந்தன. சிக்காகோநகரம் இப்படி ரத்தக்கடலில் அமைதி கண்டு கொண்டிருந்தது.

இதன்பிறகு யார் குரல் எழுப்புவார்கள் என்ற இறுமாந்திருந்த முதலாளிகளின் இதயத்தை மற்றெந்த அணி பேயாட் செய்தது இந்த அணி கிளப்பியது மே 4-ம் நாள் மீண்டும் இரத்தம் குடிக்க திரண்டு வந்தது அரசபடை, அவ்வளவுதான் அப்போது ஒருவன் தொழிலாளர் அணியை சேர்ந்தவன் வெடிகுண்டு படைவந்த திசையை நோக்கி எறிந்தான் சர்க்கார் படை சிதறுண்டது. வெடிகுண்டு வீசியதுயார்? சில மாதங்களுக்குள்ளாகவே நால்வர் பிடிபட்டனர். அந்த நால்வருக்கும் தூக்குதண்டனை தரப்பட்டது.அந்த உடல்கள் தான் 1887-ம் ஆண்டு நவம்பர் 11-ல் தொங்கிக் கொண்டிருந்தன. உலகத் தொழிலாளர்களின் உள்ளத்திலும் அந்த நான்கு பிணங்களும் எழுச்சித் திருவுருவங்களாக பதிந்தன.

1889-ல் பாரிசில் தொழிலாளர் மாநாடுகூடியது. அந்த மாநாட்டில் உலக மக்களின் இதயத்தையே குலுக்கிய சிக்காகோ சம்பவம்பற்றி பேசப்பட்டது. அதன் முடிவு தான் 1886-ம் ஆண்டு மே 1-ம் நாள் தொழிலாளர்களின் புரட்சி தினமாக ஆண்டுதோறும் கொண்டாடப்படுகிறது.

—

### தேசிய சுவீப்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தலா 161.20 பெறும் 100 டிக்கெட்டுகள் விபரம்:

| | | |
|---|---|---|
| 03 Z 0670 | 01 Q 0170 | 06 T 0044 |
| 01 L 0474 | 10 S 0209 | 11 D 0855 |
| 05 R 0416 | 04 P 0263 | 04 Z 0523 |
| 10 Q 0549 | 08 Q 0218 | 13 F 0687 |
| 04 U 0944 | 08 J 0815 | 01 U 0214 |
| 11 D 0860 | 11 P 0513 | 12 B 0778 |
| 06 P 0972 | 01 J 0311 | 10 S 0254 |
| 04 M 0176 | 12 B 0681 | 04 O 0783 |
| 04 K 0119 | 01 T 0297 | 04 B 0026 |
| 10 K 0337 | 02 S 0187 | 08 Y 0259 |
| 03 V 0321 | 08 M 0566 | 02 M 0503 |
| 04 D 0930 | 04 Y 0659 | 10 T 0709 |
| 02 H 0656 | 08 C 0110 | 03 N 0688 |
| 12 J 0757 | 06 N 0483 | 09 Q 0538 |
| 06 F 0680 | 10 Y 0696 | 12 H 0452 |
| 02 S 0685 | 11 L 0319 | 08 X 0947 |
| 02 X 0590 | 05 G 0848 | 01 Z 0647 |
| 12 T 0938 | 11 V 0217 | 04 A 0536 |
| 10 A 0084 | 10 M 0201 | 06 G 0143 |
| 07 S 0668 | 08 O 0617 | 07 K 0906 |
| 13 T 0151 | 04 U 0313 | 03 J 0771 |
| 05 T 0371 | 07 W 0951 | 05 N 0670 |
| 09 F 0490 | 06 H 0365 | 11 P 0862 |
| 02 B 0376 | 04 H 0104 | 10 S 0330 |
| 05 D 0617 | 04 T 0888 | 11 M 0138 |
| 12 Q 0547 | 01 M 0810 | 05 U 0607 |
| 09 U 0636 | 08 V 0249 | 01 S 0571 |
| 03 X 0547 | 05 L 0954 | 01 N 0599 |
| 06 F 0993 | 03 U 0653 | 09 K 0106 |
| 10 G 0008 | 06 X 0687 | 03 V 0967 |
| 06 H 0879 | 04 A 0814 | 07 P 0724 |
| 03 G 0773 | 11 B 0165 | 09 B 0674 |
| 12 K 0506 | 11 J 0100 | 03 B 0772 |
| | 01 D 0036 | |

இலங்கைத் தமிழரசு ... ஈழநாடு ... லிமிடெட் ... காரியாலயம் ... மே. வி. ... இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1965-ம் ஆண்டு மே மாதம் 1-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org